# ஆண்டுப் பொதுத் தேர்வு - மார்ச் - 2024

## 12 - ஆம் கணக்குப்பதிவியல் - விடைக் குறிப்பு ( TENTATIVE )

| A TYPE | | | B TYPE | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஆ | பத்திர முனைமக் கணக்கு | 1 | ஆ | எதிர்பதிவு சான்றாவணம் |
| 2 | அ | தன்னுருவாக்கப்பட்ட நற்பெயர் | 2 | ஆ | பத்திர முனைமக் கணக்கு |
| 3 | அ | 2 1 | 3 | இ | Ctrl + Q |
| 4 | ஈ | பெயரளவு க/கு | 4 | அ | உபரி அல்லது பற்றாக்குறை |
| 5 | ஆ | கூடுதல் முதல் கொண்டு வந்தது | 5 | ஆ | மொத்தக் கடனாளிகள் கணக்கு |
| 6 | அ | 5:3 | 6 | ஈ | ( ) மற்றும் (iv) |
| 7 | அ | ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x ஆண்டுத் தொகை காரணியின் தற்போதைய மதிப்பு | 7 | இ | காப்பு முதல் |
| 8 | அ | பழைய விளையாட்டுப் பொருள்கள் விற்றது முதலின வரவு | 8 | அ | தன்னுருவாக்கப்பட்ட நற்பெயர் |
| 9 | ஈ | 110% | 9 | இ | நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையில் |
| 10 | ஈ | ₹. 8,000 மற்றும் ₹. 4,000 | 10 | அ | 5:3 |
| 11 | இ | ₹. 64,000 | 11 | ஈ | பழைய இலாபப் பகிர்வு விகிதம் |
| 12 | ஈ | பழைய இலாபப் பகிர்வு விகிதம் | 12 | அ | ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் x ஆண்டுத் தொகை காரணியின் தற்போதைய மதிப்பு |
| 13 | ஆ | மொத்தக் கடனாளிகள் கணக்கு | 13 | ஈ | ₹. 8 000 மற்றும் ₹. 4,000 |
| 14 | அ | உபரி அல்லது பற்றாக்குறை | 14 | ஆ | ஒரு சொத்து |
| 15 | ஈ | (i) மற்றும் (iv) | 15 | அ | பழைய விளையாட்டுப் பொருள்கள் விற்றது - முதலின வரவு |
| 16 | ஆ | ஒரு சொத்து | 16 | அ | 2:1 |
| 17 | இ | நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையில் | 17 | ஈ | பெயரளவு க/கு |
| 18 | இ | காப்பு முதல் | 18 | ஆ | கூடுதல் முதல் கொண்டு வந்தது |
| 19 | இ | Ctrl + Q | 19 | ஈ | 110% |
| 20 | ஆ | எதிர்பதிவு சான்றாவணம் | 20 | இ | ₹. 64,000 |



## பகுதி — II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும் அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 2 = 14$

**21. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்றால் என்ன?**

- பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்பது, ஒரு இலாப நோக்கற்ற அமைப்பில், ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்படும், ரொக்கம் மற்றும் வங்கி நடவடிக்கைகளின் தொகுப்பு ஆகும்.

**22. நற்பெயர் என்றால் என்ன?**

- ஒரு தொழிலுக்கு நன்மையை தரக்கூடிய, அத் தொழிலின் புகழ் அல்லது நன்மதிப்பு நற்பெயர் ஆகும்.

**23 பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?**

- பங்குதாரர் ஒருவர், ஒதுக்கீட்டு பணத்தையோ அல்லது அழைப்புப் பணத்தையோ செலுத்தத் தவறினால், அவருடைய பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படும்.

**24. நடைமுறை முதல் என்றால் என்ன?**

- நடைமுறை முதல் என்பது நடப்புப் பொறுப்புகளைவிட அதிகமாக உள்ள நடப்புச் சொத்துகளைக் குறிப்பதாகும்.

**25. தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?**

- தானியங்கும் கணக்கியல் என்பது, கணக்கியல் மென்பொருள் உதவியுடன், கணக்கேடுகளை உடனடியாக பராமரிக்கும் அணுகு முறையாகும்.

**26.**

2018, டிசம்பர் 3 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான
இலாப நட்ட அறிக்கை

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் ( 2018, டிசம்பர் 31) | 1,45,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் ( சொந்த பயனுக்கு சரக்கு எடுத்தது ) | 30,000 |
| | 1,75 000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 15,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 1,60,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( 2018, ஜனவரி ) | 1,00,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 60,000 |

27. பிரவீணா மற்றும் தான்யா அவர்களின் பழைய பங்கு = 7 : 3 அதாவது, $\frac{7}{10} : \frac{3}{10}$

பிரவீணா தான்யா மற்றும் மாலினியின் புதிய இலாப பங்கு = 5 : 2 : 3

அதாவது = $\frac{5}{10} : \frac{2}{10} : \frac{3}{10}$

**தியாகப் பங்கு = பழைய பங்கு - புதிய பங்கு**

**பிரவீணா** = $\frac{7}{10} - \frac{5}{10} = \frac{7-5}{10} = \frac{2}{10}$

**தான்யா** = $\frac{3}{10} - \frac{2}{10} = \frac{3-2}{10} = \frac{1}{10}$

ஆகையால், ிரவீணா மற்றும் தான்யா ஆகியோரின் தியாகப் பங்கு = $\frac{2}{10} : \frac{1}{10}$

∴ தியாக விகிதம் = **2 : 1**

28. **குறிப்பேட்டுப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 மார்ச் 31 | காப்பு நிதி க/கு ப<br>தீனா முதல் க/கு ( 50,000 x $^5/_{10}$)<br>சூர்யா முதல் க/கு ( 50,000 x $^3/_{10}$)<br>ஜானகி முதல் க/கு ( 50,000 x $^2/_{10}$)<br>( காப்பு நிதி அனைத்துக் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு பழைய இலாப விகிதத்தில் மாற்றப்பட்டது ) | | 50,000 | <br>25,000<br>15,000<br>10,000 |

29. மொத்த இலாப விகிதம் = $\frac{\text{மொத்த இலாபம்}}{\text{விற்பனை மூலம் பெற்ற வருவாய்}}$ x 100

மொத்த இலாபம் = விற்பனை மூலம் பெற்ற வருவாய் - விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்க விலை

= 1,00,000 - 80,000 = ₹. 20,000

மொத்த இலாப விகிதம் = $\frac{20,000}{1,00,000}$ x 100 = **20%**

30. **கூட்டாண்மை நிறுவனங்களால் தயாரிக்கப்படும் இறுதிக் கணக்குகளின் பெயர்களைக் கூறுக.**

) உற்பத்திக் கணக்கு
2) வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்கு
3) இலாபநட்டப் பகிர்வு கணக்கு
4) இருப்புநிலைக் குறிப்பு

B.BALAJI GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

31. **நிலைஅறிக்கை மற்றும் இருப்புநிலைக் குறிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைத் தரவும்.**

| அடிப்படை | நிலை அறிக்கை | இருப்புநிலைக் குறிப்பு |
|---|---|---|
| 1.நோக்கம் | இது, வியாபாரத்தின் முதலைக் கண்டறிய தயாரிக்கப் படுகின்றது | இது, வியாபாரத்தின் நிதிநிலையைக் கண்டறிய தயாரிக்கப் படுகின்றது |
| 2 கணக்கியல் முறை | இரட்டைப்பதிவு முறையை பின்பற்றுவது கட்டாயமானதாக இல்லாத போது, நிலையறிக்கை தயாரிக்கப்படும். | இரட்டைப்பதிவு முறையில் கணக்குகள் பராமரிக்கப்படும் போது, இருப்புநிலை குறிப்பு தயாரிக்கப்படும். |
| 3. தயாரிப்பின் அடிப்படை | இது, முழுமையாக பேரேட்டுக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டதல்ல | இது, முழுமையாக பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்படுகிறது |
| 4.நம்பகத்தன்மை | இது, முழுமை பெறா பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், நம்பகத்தன்மை உடையது அல்ல | இது, இரட்டைப்பதிவு முறையில் தயாரிக்கப்படுவதால், நம்பகத்தன்மை உடையது. |
| 5. விடுபட்ட விவரங்கள் | ஏடுகள் முழுமையாக பராமரிக்கப்படாததால், விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது கடினம். | அனைத்து நடவடிக்கைகளின் இரண்டு தன்மைகளும் பதியப்படுவதால், விடுபட்ட விவரங்களைக் கண்டறிவது எளிது. |

32.

2018, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கு

ப வ

| செலவுகள் | தொகை ₹. | தொகை ₹. | வருமானம் | தொகை ₹. |
|---|---|---|---|---|
| எழுதுபொருள்கள் பயன்படுத்தியது : | | | | |
| தொடக்க இருப்பு | 300 | | | |
| கூட்டுக : கொள்முதல் | 1,500 | | | |
| | 1,800 | | | |
| கழிக்க : இறுதி இருப்பு | 200 | 1,600 | | |

B BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**2018, மார்ச் 31ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|
| | | எழுது பொருள்கள் இறுதி இருப்பு | 200 |

33.

எடுப்புகள் மீது வட்டி = எடுப்புத் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்

மார்ச் 1 இல் எடுப்பு = ₹. 4,000 x $\frac{6}{100}$ x $\frac{10}{12}$ = ₹. 200

ஜூன் 1 இல் எடுப்பு = ₹. 4,000 x $\frac{6}{100}$ x $\frac{7}{12}$ = ₹. 140

செப்டம்பர் 1 இல் எடுப்பு = ₹. 4,000 x $\frac{6}{100}$ x $\frac{4}{12}$ = ₹. 80

டிசம்பர் 1 இல் எடுப்பு = ₹. 4,000 x $\frac{6}{100}$ x $\frac{1}{12}$ = ₹. 20

**எடுப்புகள் மீது வட்டி = ₹. 440**

34. சராசரி இலாபத்தின் மொத்த மூலதன மதிப்பு = $\frac{\text{சராசரி இலாபம்}}{\text{சாதாரண இலாப விகிதம்}}$ × 100

= $\frac{20,000}{10}$ × 100

= ₹. 2,00,000

நற்பெயர் = வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு - பயன்படுத்தப்பட்ட முதல்

= 2,00,000 - 1,50,000

= ₹. 50,000

34. ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹ | தொகை ₹ | விவரம் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|
| இயந்திரம் க/கு | | 4 000 | கட்டடம் க/கு | | 15,000 |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு க/கு | | 1,000 | | | |
| <u>மறுமதிப்பீட்டு இலாபம்</u> | | | | | |
| இராஜேஷ் முதல் க/கு (10,000 x $^3/_5$) | 6,000 | | | | |
| இரமேஷ் முதல் க/கு ( 10 000 x $^2/_5$) | 4,000 | 10,000 | | | |
| | | 15,000 | | | 15,000 |



36. **கூட்டாளி விலகலின்போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்**

1) பகிர்ந்து தரா இலாபங்கள், காப்புகள் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்தளித்தல்
2) சொத்துகளையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்தல்
3) புதியவிகிதம் மற்றும் ஆதாய விகிதம் ஆகியவற்றைத் தீர்மானித்தல்
4) நற்பெயர் சரிக்கட்டுதல்
5) கூட்டாளி விலகும் நாள் வரை உள்ள நடப்பு ஆண்டு இலாபம் அல்லது நட்டத்தை சரிக்கட்டுதல்
6) விலகும் கூட்டாளிக்கு செலுத்தவேண்டிய தொகையை செலுத்துதல்

37. **முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளை கூறவும்**

| வ.எண் | முன்னுரிமைப் பங்குகள் | நேர்மைப் பங்குகள் |
|---|---|---|
| 1 | பிறவகையான பங்குகள் பெற்றிருக்கும் உரிமைகளை விட, சிலவற்றில் முன்னுரிமைப் பெற்றிருக்கும் பங்குகள் முன்னுரிமைப் பங்குகள் எனப்படுகின்றன. | முன்னுரிமைப் பங்குகள் அல்லாத பங்குகள் நேர்மைப்பங்குகள் ஆகும் |
| 2 | நிறுமத்தின் வாழ்நாள் முழுவதும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பங்காதாயம், இதில் பெறமுடியும். | இதில், பங்காதாயம் நிலையாக இருப்பதில்லை |
| 3 | நிறும கலைப்பின் போது, பங்குதாரர்களுக்கு முதலை திரும்ப செலுத்த வேண்டும் | நிறும கலைப்பின் போது, முன்னுரிமை பங்குதாரர்களுக்கு, முதலை திரும்ப செலுத்திய பிறகே, நேர்மை பங்குதாரார்களுக்கு செலுத்தப்படும். |

38 **ராஜா வரையறு நிறுமத்தின் 2017 மாரச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பொது அளவு வருமான அறிக்கை**

| விவரம் | தொகை ₹. | விற்பனை மூலம் பெற்ற வருவாயில் சதவீதம் |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 4,50,000 | 100 |
| <u>கூட்டுக</u> : இதர வருமானம் | 67 500 | 15 |
| மொத்த வருவாய் | 5,17,500 | 115 |
| <u>கழிக்க</u> : செலவுகள் | 1,35,000 | 30 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 3,82,500 | 85 |

39. புற அக பொறுப்புகள் விகிதம் = $\frac{\text{நீண்டகால கடன்}}{\text{பங்குதாரர் நிதி}}$

நீண்டகால கடன் = கடனீட்டுப்பத்திரம் = ₹. 80,000

பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்கு முதல் + காப்புகள் மற்றும் மிகுதிகள்

= 1,00,000 + 60,000

= ₹. 1,60,000

புற அக பொறுப்புகள் விகிதம் = $\frac{80,000}{1,60,000}$ = 0.5 : 1

40.Tally - ல் கீழ்கண்டவற்றைப் பார்வையிடுவதற்கான நுழைவாயிலை எழுதுக

(i) இலாப நட்டக் கணக்கு

F10: A/c Reports > Profit & Loss A/c > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Profit & Loss A/c > AltF1 (detailed)

(ii) இருப்பு நிலைக் குறிப்பு

F10: A/c Reports > Balance Sheet > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Balance Sheet > AltF1 (detailed)

(iii) நாளேடு

F10: A/c Reports > Day book > AltF1 (detailed)

அல்லது

Gateway of Tally > Reports > Display> Day book > AltF1 (detailed)



## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 7 × 5 = 35

4 அ) கணேஷ் என்பவரின் ஏடுகளில் 2018 , மார்ச் 31 ஆம் நாளைய நிலையறிக்கை

| பொறுப்புகள் | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 9,000 | ரொக்கம் | 5 000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 | வங்கி ரொக்கம் | 24,000 |
| முதல் ( இருப்பு கட்டும் தொகை) | 88,000 | சரக்கிருப்பு | 18,000 |
| | | கடனாளிகள் | 16,000 |
| | | பெறுதற்குரிய மாற்றுச் சீட்டு | 7 000 |
| | | நிலம் மற்றும் கட்டடங்கள் | 30,000 |
| | | அறைகலன் | 3,000 |
| | 1,03,000 | | 1,03,000 |

2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான

இலாப நட்ட அறிக்கை

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| இறுதிமுதல் (31.03.2019) | 88,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 15,000 |
| | 1,03,000 |
| கழிக்க : கூடுதல் முதல் | 20,000 |
| சரிக்கட்ட இறுதி முதல் | 83,000 |
| கழிக்க: தொடக்க முதல் ( 2018, ஏபரல் 1 ) | 75,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 8,000 |

( அல்லது )

41. ஆ) ப மறுமதிப்பீட்டுக் கணக்கு வ

| விவரம் | தொகை ₹ | தொகை ₹ | விவரம் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|
| சரக்கிருப்பு க/கு | | 2,000 | அறைகலன் க / கு | | 15,000 |
| கடனாளிகள் க/கு | | 2,500 | | | |
| கொடுபடவேண்டிய கூலி க/கு | | 4,500 | | | |
| மறுமதிப்பீட்டு இலாபம் | | | | | |
| வெற்றி முதல் க/கு ( 6,000 x $\frac{3}{5}$ ) | 3,600 | | | | |
| இரஞ்சித் முதல் க/கு (6,000 x $\frac{2}{5}$) | 2,400 | 6,000 | | | |
| | | 15,000 | | | 15,000 |

ப **முதல் கணக்கு** வ

| விவரம் | வெற்றி ₹ | இரஞ்ஜித் ₹ | சூரியா ₹ | விவரம் | வெற்றி ₹ | இரஞ்ஜித் ₹ | சூரியா ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| இலாப நட்ட க/கு | 6,000 | 4,000 | -- | இருப்பு கீ/கொ | 30,000 | 20,000 | --- |
| இருப்பு கீ/ இ | 30,600 | 20,400 | 10,000 | வங்கி க/கு | --- | --- | 10,000 |
| | | | | காப்பு நிதி க/கு | 3,000 | 2,000 | - - |
| | | | | மறுமதிப்பீடு க/கு | 3,600 | 2,400 | --- |
| | 36,600 | 24,400 | 10,000 | | 36,600 | 24,400 | 10,000 |
| | | | | இருப்பு கீ/கொ | 30,600 | 20 400 | 10,000 |

<u>01.01 2018 - ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு</u>

| பொறுப்புகள் | தொகை ₹ | தொகை ₹ | சொத்துகள் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|
| <u>முதல் கணக்குகள்</u> | | | அறைகலன் | 25,000 | |
| வெற்றி | 30,600 | | <u>கூட்டுக</u> : | | |
| இரஞ்ஜித் | 20,400 | | மதிப்பேற்றம் 20% | 15,000 | 40,000 |
| சூரியா | 10,000 | 61,000 | சரக்கிருப்பு | 20,000 | |
| பற்பல கடனீந்தோர் | | 45,000 | <u>கழிக்க</u> : | | |
| | | | மதிப்பு குறைப்பு | 2,000 | 18,000 |
| கொடுபட வேண்டிய கூலி | | 4,500 | கடனாளிகள் | 10,000 | |
| | | | <u>கழிக்க</u> : | | |
| | | | மதிப்பு குறைப்பு | 2,500 | 7,500 |
| | | | கை ரொக்கம் | 35,000 | |
| | | | <u>கூட்டுக</u> : சூரியாவின் முதல் | 10 000 | 45,000 |
| | | 1,10,500 | | | 1,10,500 |



42.அ)

<u>பூம்புகார் இலக்கிய மன்றத்தின் ஏடுகளில் 2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு</u>

ப வ

| பெறுதல்கள் | தொகை ₹. | தொகை ₹. | செலுத்தல்கள் | தொகை ₹. |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | இருப்பு கீ/கொ | |
| ரொக்க இருப்பு | | 5,000 | வங்கி மேல்வரைப்பற்று | 4,000 |
| முதலீடுகள் விற்றது | | 1,000 | அச்சு மற்றும் எழுதுபொருள் | 1,500 |
| அறக்கட்டளை நிதி வரவுகள் | | 2,000 | வட்டி செலுத்தியது | 3,250 |
| சந்தா பெற்றது | | 20,000 | சிற்றுண்டி வாங்கியது | 1,500 |
| இதர வரவுகள் | | 750 | ஒளியூட்டுக் கட்டணம் | 1,300 |
| அரசு மானியம் பெற்றது | | 6,000 | பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் | 2,500 |
| சிற்றுண்டி விற்றது | | 1,500 | போக்குவரத்துச் செலவுகள் | 2,750 |
| | | | புத்தகங்கள் வாங்கியது | 10,000 |
| | | | காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 4,000 |
| | | | இருப்பு கீ/இ | |
| | | | வங்கி ரொக்கம் | 2,000 |
| | | | கைரொக்கம் | 3,450 |
| | | 36,250 | | 36 250 |

( அல்லது )

42. ஆ) **நற்பெயரைத் தீர்மானிக்கும் ஏதேனும் ஐந்து காரணிகளைக் கூறி அவற்றை விளக்கவும்**

1) <u>நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன்</u>
   - நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன், நற்பெயரின் மதிப்பினைத் தீர்மானிக்கிறது.
   - அதிக இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனம் அல்லது எதிர்காலத்தில் அதிக இலாபம் ஈட்டும் திறனைக் கொண்டுள்ள ஒரு நிறுவனம், அதிகமான நற்பெயர் மதிப்பினைக் கொண்டிருக்கும்.
2) <u>வியாபார நிறுவனத்தின் சாதகமான அமைவிடம்</u>
   - வியாபார நிறுவனமானது, வாடிக்கையாளர்களால் எளிதில் சென்றடையக் கூடிய முக்கிய இடத்தில் அமைந்திருந்தால், அது அதிக வாடிக்கையாளர்களைக் கவரும்.

3) <u>நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதல்</u>

- நல்ல தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதால், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்று, நிறுவனத்தின் நற்பெயர் அதிகரிக்கும்.

4) <u>வியாபார நிறுவனத்தின் கால அளவு</u>

- நீண்ட ஆண்டுகள் வணிகத்தை நடத்தி வரும் நிறுவனத்தை, வாடிக்கையாளர் நன்கு அறிந்திருப்பதால், அந்தநிறுவனம் அதிக நன்மதிப்பைக் கொண்டிருக்கும்.

5) <u>திறமைமிகு மேலாண்மை</u>

- திறமையான மேலாண்மைத் திறன் கொண்டிருக்கும் நிறுவனம், திறமை குறைந்த மேலாண்மைத் திறன் கெ ண்டுள்ள நிறுவனத்தோடு ஒப்பிடுகையில், அதிகமான இலாபம் ஈட்டும் மற்றும் அதிக மதிப்பிலான நற்பெயரைக் கொண்டிருக்கும்.

6) <u>போட்டியின் அளவு</u>

- போட்டியே இல்லாத அல்லது குறைவான போட்டியைக் கொண்டுள்ள நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு அதிகமானதாக இருக்கும்.

7) <u>பிற காரணிகள்</u>

- உரிமையாளரின் பிரபலம், ஈர்க்கக்கூடிய விளம்பரம், வாடிக்கையாளரிடம் நெருங்கிய தொடர்பு போன்ற பிற காரணிகளும், தொழிலின் நற்பெயரின் மதிப்பை உயர்த்தக் கூடியதாகும்.

43. அ)

ப **கூட்டாளிகளின் முதல் கணக்கு** வ

| நாள் | விவரம் | மன்னன் ₹ | சேவகன் ₹ | நாள் | விவரம் | மன்னன் ₹ | சேவகன் ₹ |
|---|---|---|---|---|---|---|---|
| | எடுப்புகள் | 40,000 | 35,000 | | இருப்பு கீ/கொ | 2,00,000 | 1,75,000 |
| | எடுப்புகள் மீது வட்டி | 1,000 | 500 | | இலாப நட்ட பகிர்வு க/கு | 21,000 | 16,500 |
| | இருப்பு கீ/இ | 2,10,000 | 1,69,000 | | முதல் மீது வட்டி | 12,000 | 10,500 |
| | | | | | ஊதியம் | 18,000 | -- |
| | | | | | கழிவு | -- | 2 500 |
| | | 2,51,000 | 2,04,500 | | | 2,51,000 | 2,04,500 |
| | | | | | இருப்பு கீ/கொ | 2,10,000 | 1,69,000 |

( அல்லது )



43. ஆ)

**குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2017 ஏப்ரல் 1 | கட்டடம் க/கு ப<br>மறுமதிப்பீட்டு க/கு<br>( கட்டடத்தில் மதிப்பு உயர்த்துவது பதிவு செய்யப்பட்டது ) | | 30,000 | 30,000 |
| ,, | மறுமதிப்பீட்டு க/கு ப<br>சரக்கிருப்பு க/கு<br>அறைகலன் க/கு<br>கொடுபடா பொறுப்பு க/கு<br>( சரக்கிருப்பு மதிப்பு குறைப்பது, அறைகலன் மீது தேய்மானம் நீக்கியது மற்றும் கொடுபடா பொறுப்பு பதிவு செய்யப்பட்டது ) | | 18,000 | <br>5,000<br>12,000<br>1,000 |
| ,, | மறுமதிப்பீட்டு க/கு ப<br>ரோஜா முதல் க/கு<br>நீலா முதல் க/கு<br>கனகா முதல் க/கு<br>( மறுமதிப்பீட்டு இலாபம் முதல் கணக்கிற்கு மாற்றப்பட்டது) | | 12,000 | <br>4 800<br>3,600<br>3,600 |

ப **மறுமதிப்பீட்டுக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹ | தொகை ₹ | விவரம் | தொகை ₹ | தொகை ₹ |
|---|---|---|---|---|---|
| சரக்கிருப்பு க/கு | | 5,000 | கட்டடம் க/கு | | 30,000 |
| அறைகலன் க/கு | | 12,000 | | | |
| கொடுபடா பொறுப்பு க/கு | | 1,000 | | | |
| <u>மறுமதிப்பீட்டு இலாபம்</u> | | | | | |
| ரோஜா முதல் க/கு (12,000 x $4/_{10}$) | 4,800 | | | | |
| நீலா முதல் க/கு (12,000 x $3/_{10}$) | 3,600 | | | | |
| கனகா முதல் க/கு ( 12,000 x $3/_{10}$) | 3,600 | 12,000 | | | |
| | | 30,000 | | | 30,000 |

44. அ) சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்ட முதல் × சாதாரண இலாப விகிதம்

சாதாரண இலாபம் $= 2,00,000 \times \frac{15}{100} =$ ₹. 30,000

உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்

= 42,000 - 30,000

= ₹. 12,000

நற்பெயர் = உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

= 12,000 × 3

= **₹. 36,000**

( அல்லது )

44. ஆ) **கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விளக்கவும்.**

1) **கணக்கேடுகளைப் பராமரித்தல்:**
- கணினிமயக் கணக்கியல் முறையில் கணக்கேடுகளை எளிதாகவும், திறம்பட நீண்ட காலங்களுக்கு பராமரிக்கலாம்.
- இதற்கு அதிகப்படியான இடவசதி தேவையில்லை
- தரவு மற்றும் தகவல்களை விரைவாகவும் துல்லியமாகவும் எடுக்க, இது வழிவகை செய்கிறது.

2) **சரக்கிருப்பு மேலாண்மை:**
- கணினிமயக் கணக்கியல் முறை, திறம்பட்ட சரக்கிருப்பு மேலாண்மைக்கு, வழிவகை செய்கிறது
- வேகமாக நகரும், மெதுவாக நகரும் மற்றும் வழக்கொழிந்த சரக்கிருப்பை கண்டறியலாம்.
- சரக்கிருப்பு, சரக்கிருப்பு அளவுகள் போன்றவற்றின் மேம்படுத்தப்பட்ட தகவல்களை உடனுக்குடன் எடுக்கலாம்.

3) **சம்பளப் பட்டியல்தயாரித்தல்:**
- சம்பளப்பட்டியலானது பணியாளர்களுக்கு கொடுக்க வேண்டிய தொகையினை கணக்கீடு செய்வதாகும்.
- பணியாளர்களின் சம்பளமானது, வேலை செய்த நேரம் அல்லது நாட்கள் அல்லது உற்பத்தி அலகுகள் அடிப்படையில் கணக்கிடப்படலாம்.
- கணினிமய கணக்கியல் முறை, பணியாளர்களின் வருகையைப் பதிகிறது, சம்பளத் தொகையைக் கணக்கிடுகிறது, சேமநல நிதி மற்றும் வருமான வரி போன்ற பிடித்தங்களையும் செய்கிறது.

4) **அறிக்கை உருவாக்குதல்:**
- கணினிமயக் கணக்கியல் முறை, பல்வேறு வழக்கமான மற்றும் குறிப்பிட்ட நோக்க அறிக்கைகள் உருவாக்குவதற்கு உதவி புரிகிறது.

5) **தரவு அனுப்புதல் / பெறுதல்:**
- கணக்கியல் தரவு மற்றும் தகவல்களை நிறுவனத்தின் உள்ளேயோ அல்லது நிறுவனத்திற்கு வெளியேயோ உள்ள, வேறு ஒரு பயனரிடம் இருந்து அனுப்பலாம் அல்லது பெறலாம்.

6) **வரிவிதிப்பு:**
- கணினிமயக் கணக்கியல் முறை, பல்வேறு வரிகளை கணக்கீடு செய்யவும், அதை பிடித்தம் செய்து, அரசாங்க கணக்கில் செலுத்துவதற்கும் உதவி புரிகிறது



45. அ) **கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தின் ஏடுகளில் 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக்கணக்கு**

ப வ

| செலவுகள் | தொகை ₹. | வருமானம் | தொகை ₹. |
|---|---|---|---|
| மைதான வாடகை செலுத்தியது | 12,000 | அரங்க வாடகை பெற்றது | 6 000 |
| அச்சுகட்டணம் | 5,000 | சந்தா பெற்றது | 9,000 |
| வங்கிக் கட்டணம் | 1,000 | பாதுகாப்பு பெட்டக வாடகை பெற்றது | 2,000 |
| கட்டடம் மீதான காப்பீடு | 2,000 | **பற்றாக்குறை** ( வருமானத்தைக் காட்டிலும் மிகுதியான செலவுகள் ) | **26,000** |
| தொடர் விளையாட்டுப் போட்டி செலவுகள் | 16,000 | | |
| தணிக்கைக் கட்டணம் | 3,000 | | |
| விளையாட்டுப் பொருட்கள் வாங்கியது | 4,000 | | |
| | 43,000 | | 43,000 |

( அல்லது )

45. ஆ)

**முத்து வரையறு நிறுமத்தின் 2017 மார்ச் 31 மற்றும் 2018 மாரச் 31 ஆம் நாளைய ஒப்பீட்டு இருப்பு நிலைக்குறிப்பு**

| விவரம் | 2016 - 2017 ₹. | 2017 - 2018 ₹. | தொகையின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) ₹. | சதவீதத்தின் கூடுதல்( + ) அல்லது குறைவு ( - ) |
|---|---|---|---|---|
| 1. **பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | | | | |
| பங்குதாரர் நிதி | 4,00,000 | 4,40,000 | + 40,000 | 10 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 1,50,000 | 1,65,000 | 5,000 | + 10 |
| நடப்பு பொறுப்புகள் | 75,000 | 82,500 | + 7,500 | + 10 |
| **மொத்தம்** | 6,25,000 | 6,87,500 | + 62,500 | + 10 |
| 2. **சொத்துகள்** | | | | |
| நீண்டகாலச் சொத்துகள் | 5,00,000 | 6,00,000 | 00 000 | + 20 |
| நடப்புச் சொத்துகள் | 1,25,000 | 87,500 | - 37,500 | - 30 |
| **மொத்தம்** | 6,25,000 | 6,87,500 | + 62,500 | + 10 |

46. அ)

2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபநட்டப் பகிர்வு கணக்கு

ப வ

| விவரம் | ₹ | ₹ | விவரம் | ₹ | ₹ |
|---|---|---|---|---|---|
| முதல் மீதான வட்டி கணக்கு : | | | இலாப நட்ட க/கு | | 20,000 |
| துரை ( 25,000 × 5 /100 ) | 1,250 | | | | |
| வேலன் ( 30,000 × 5 /100 ) | 1,500 | 2,750 | எடுப்புகள் மீதான வட்டி கணக்கு : | | |
| துரை ஊதியம் க/கு | | 5,000 | துரை | 300 | |
| வேலன் கழிவு க/கு | | 2,000 | வேலன் | 450 | 750 |
| கூட்டாளிகளின் முதல் கணக்கு : ( இலாபம் மாற்றப்பட்டது ) | | | | | |
| துரை ( 11,000 × $^2/_5$ ) | 4,400 | | | | |
| வேலன் ( 11,000 × $^3/_5$ ) | 6,600 | 11,000 | | | |
| | | 20,750 | | | 20,750 |

( அல்லது )

46. ஆ)

( ) புற அக பொறுப்புகள் விகிதம் = $\frac{\text{நீண்டகால கடன்}}{\text{பங்குநர் நிதி}}$

நீண்டகால கடன் = 9 % கடனீட்டுப்பத்திரம் = ₹. 4,00,000

பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்கு முதல் + முன்னுரிமைப் பங்குகள் + காப்புகள் மற்றும் மிகுதிகள்

= 1,50,000 + 2,00,000 + 1,50,000

= ₹. 5,00,000

புற அக பொறுப்புகள் விகிதம் = $\frac{4,00,000}{5,00,000}$ = 0.8 : 1

ii) உரிமையாளர் விகிதம் = $\frac{\text{பங்குநர் நிதி}}{\text{மொத்த சொத்துகள்}}$

உரிமையாளர் விகிதம் = $\frac{5,00,000}{10,00,000}$ = 0.5 : 1



ii) முதல் உந்துதிறன் விகிதம் = $\frac{\text{நிலையான வட்டி அல்லது நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகள்}}{\text{நேர்மைப் பங்குதாரர் நிதி}}$

நிலையான வட்டி அல்லது நிலையான பங்காதாயம் ஈட்டுகின்ற நிதிகள் = 8% முன்னுரிமைப் பங்குகள் + 9% கடனீட்டுப் பத்திரங்கள்

= 2,00,000 + 4,00,000

= ₹. 6,00,000

நேர்மைப் பங்குதாரர் நிதி = நேர்மைப் பங்குமுதல் + காப்புகள் மற்றும் மிகுதி

= 1,50,000 + 1,50,000

= ₹. 3,00,000

முதல் உந்துதிறன் விகிதம் = $\frac{6,00,000}{3,00,000}$ = 2 : 1

47. அ)

கவிதா வரையறு நிறுமத்தின் போக்கு பகுப்பாய்வு

| விவரம் | ₹. ஆயிரங்களில் | | | போக்கு சதவீதங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015 - 2016 | 2016 - 2017 | 2017 - 2018 | 20 5 - 2016 | 2016 - 2017 | 2017 - 2018 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 100 | 120 | 160 | 100 | 120 | 160 |
| கூட்டுக இதர வருமானம் | 20 | 24 | 20 | 100 | 120 | 100 |
| மொத்த வருமானங்கள் | 120 | 144 | 180 | 100 | 120 | 150 |
| கழிக்க : செலவுகள் | 20 | 14 | 40 | 100 | 70 | 200 |
| வரிக்கு முன்னர் உள்ள இலாபம் | 100 | 130 | 140 | 100 | 130 | 140 |
| கழிக்க : வருமான வரி 30% | 30 | 39 | 42 | 100 | 130 | 140 |
| வரிக்குப் பின்னர் உள்ள இலாபம் | 70 | 91 | 98 | 100 | 130 | 140 |

( அல்லது )

47. ஆ)

**ஜாய் நிறுமத்தின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப. எண் | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| | வங்கி க/கு ( 9,000 x 5 ) ப<br>நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு<br>( விண்ணப்பத்தொகை பெற்றது ) | | 45 000 | 45,000 |
| | நேர்மைப் பங்கு விண்ணப்ப க/கு ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( பங்கு விண்ணப்பத் தொகையை பங்கு முதல் கணக்கிற்கு மாற்றியது ) | | 45,000 | 45,000 |
| | நேர்மை பங்கு ஒதுக்கீட்டு க/கு ( 9,000 x 3 ) ப<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற வேண்டியது ) | | 27,000 | 27,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மைப் பங்கு ஒதுக்கீட்டு க/கு<br>( ஒதுக்கீட்டுத் தொகை பெற்றது ) | | 27,000 | 27,000 |
| | நேர்மை பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு க/கு ப<br>(9,000 x 2 )<br>நேர்மைப் பங்கு முதல் க/கு<br>( பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற வேண்டியது ) | | 18,000 | 18,000 |
| | வங்கி க/கு ப<br>நேர்மைப் பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்புக/கு<br>( பங்கு முதல் மற்றும் இறுதி அழைப்பு தொகை பெற்றது ) | | 18,000 | 18,000 |